மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில் பிலிக்கல்பாளையம் ஊராட்சியைச் சுற்றி ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலேயிருந்து 15 கி.மீ. சுற்றளவிற்கு எந்தக் கால்நடை மருத்துவமனையும் இல்லாததால், அங்கு ஒரு கால்நடை மருத்துவமனையைத் துவக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

159—

சமுதாயக் கூடம்

***32395—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு அரசின் செயற்குறிப்பில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் வடபாகம் கிராமத்தில் கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட ஏழை விவசாயக் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் விவசாயக் கூலித் தொழில் செய்து வருகிறார்கள். கரூர் மாவட்டத்திலேயே ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி இந்த நெரூர் வடபாகம் கிராமமாகும். அவர்கள் திருமணம் மற்றும் விசேஷங்கள், சமுதாய நிகழ்ச்சிகள் நடத்துவதென்றால் 15 கி.மீ. தூரத்திலுள்ள கரூர் நகரத்திற்குத்தான் செல்ல வேண்டும். பொருளாதாரத்தில் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வசித்து வருகிற நிலைமையில் உள்ளூர் கோயிலில் வெட்டவெளியில்தான் அனைத்து நிகழ்ச்சிகளும் இன்று வரை நடந்து வருகின்றன. எனவே, அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்யும்பொருட்டு, அனைத்து ஊராட்சிகளுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கண்ட மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஆதி திராவிட மக்களும் பயன்பெறும் வகையில், நெரூர் வடபாகம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், நபார்டு வங்கியின்மூலம் நெரூர் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிவதோடு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி உதவியுடன் நெரூர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம், அதாவது பல்நோக்கு மையம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கி ஒப்புதல் தந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ் அவர்களின்

கோரிக்கைக்கு ஏற்ப, நெரூர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நபார்டு வங்கி நிதியுதவியின்மூலம் எத்தகைய பணிகள் நடைபெறவிருக்கின்றன என்று கேட்டிருக்கிறார். அதைப்போல, அடிப்படை வசதிகள் பற்றியும் கேட்டிருக்கிறார். நெரூர் பகுதியில் மட்டும் வரும் ஆண்டில் 52.62 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. கரூர் மாவட்டத்தில் மட்டும் 266.78 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. நடப்பு ஆண்டில் கரூர் மாவட்டத்தில், நெரூர் ஆதி திராவிடர் காலனியில் நபார்டு வங்கியின்மூலம் இணைப்புச் சாலை வசதிக்காக 21 இலட்சம் ரூபாய், சிமென்ட் சாலை வசதிக்காக 1.41 இலட்சம் ரூபாய், கால்வாய் வசதிக்காக 5.87 இலட்சம் ரூபாய், சமுதாயக் கூடம்/பல்நோக்கு மையம் அமைக்க 15.10 இலட்சம் ரூபாய், நெல் அடிக்கும் களம் அமைப்பதற்கு 1.42 இலட்சம் ரூபாய் செலவிலும் இந்தப் பணிகள் எல்லாம் நடைபெற இருக்கின்றன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின்மூலம் நெரூர் பகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஆவன செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார்.

திரு. ம. இராஜ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்த சமயம் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களிலே சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதாக உறுதி அளித்தார்கள். அந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலே செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2008 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திற்கு நாங்கள் ஆய்வுக்கு சென்றபோது, வேப்பந்தட்டை ஊரிலிருந்து பொது மக்கள் எல்லாம், எங்களுடைய பகுதிக்கு சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார் அவர்களும் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அதன் அடிப்படையில், இந்த நிதியாண்டில் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

160—

பால் உற்பத்தி

***15528—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பால் வளத்தைப் பெருக்க அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவாக்கத் திட்டத்தின்மூலம் கோவை மாவட்டத்தில் பால் வளத்தைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.